**O.S.261/2015**

Date: **10.09.2025**

Dw–2– மணி, த/பெ.நாலாயிரம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்:–**

1. எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வழக்கு விபரங்கள் இசக்கி சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, நான் அருகில் குடியிருந்து வருவதால் எனக்கு தெரியும். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி இடம் ஆக்கிரமிப்பு செய்து கட்டியதாக வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்திற்கு அருகில் குடியிருந்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் வாதி சரோஜா என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

2. சங்கரன் ஆசாரி எப்போது இறந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சங்கரன் ஆசாரியின் மகன் சுப்பிரமணியன் ஆசாரி எப்போது இறந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சங்கரன்ஆசாரி, சுப்பிரமணியன் ஆசாரி ஆகிய இருவரில் யார் முதலில் இறந்தார் என்றால் சுப்பிரமணியன் ஆசாரி தான் முதலில் இறந்தார். என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் சங்கரன் ஆசாரி இறந்தபின்பு சுப்பிரமணியன் ஆசாரிக்கு சொத்து கிடைத்தது என்று முரண்பாடாக கூறியுள்ளதில் இருந்தே சொத்து சம்பந்தமாக எனக்கு எந்தவிதமான விபரங்களும் தெரியவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் வந்து அளவீடு செய்த விபரம் தெரியுமா என்றால் விபரம் தெரியும், ஆனால் நான் பார்க்கவில்லை.

3. என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலம் பிரதிவாதி சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் பிரதிவாதி கேட்டார், நான் அந்த இடத்தில் குடியிருந்து வருவதால் விபரம் சொன்னேன். என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் 20 வருடங்களுக்கு முன்புதான் தாவா சொத்திற்கு அருகில் நான் குடியிருந்து வந்தேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2005 மற்றும் 2014ல் வாதி வீடு கட்டிய விபரம் எப்படி தெரியும் என்றால் நான் அங்குதான் இருந்தேன். அந்த தெரு வழியாகத்தான் நான் சென்றுவருவேன். நான் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வாதி பிரதிவாதி மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது சம்பந்தமாக நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆனால் விபரம் தெரியும்.

4. 2ம் பிரதிவாதி ரேவதியின் கிரய பத்திரத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரியல்ல, பார்த்துள்ளேன். எந்த வருடம் கிரயம் வாங்கினார்கள் என்றால் 2005ம் ஆண்டு வாங்கினார். யாரிடம் கிரயம் வாங்கினார்கள் என்றால் சுப்பிரமணியன் ஆசாரியின் வாரிசுதாரர்களிடமிருந்து கிரயம் வாங்கினார்கள், பெயர் தெரியவில்லை. பிரதிவாதியுடன்தான் நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். ஒவ்வொரு வாய்தாவிற்கும் பிரதிவாதியுடன்தான் வருவேன் என்றால் சரிதான். அவர்தான் செலவு செய்து அழைத்து வருவார் என்றால் சரியல்ல. சொத்து சம்பந்தமாக எனக்கு எந்தவிதமான விபரங்களும் தெரியாது என்றும், பிரதிவாதி இசக்கி என் உறவினர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு அருகில்

குடியிருந்து வந்தது கிடையாது என்றும், தாவா சொத்து சம்பந்தமாக எந்த விபரமும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

Sd/-**மணி**

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

P PRAVEEN JEEVA

Uploaded on 10.09.2025
Digitally signed by P PRAVEEN JEEVA
Date: 2025.09.10 17:12:33 +0530

மு.மா.உ.நீ

அம்பாசமுத்திரம்.